THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, from the answer given by the Hon. Minister for Agriculture, I learn that there is a Training Centre for Forest Officers in Denkinikotta in the Hosur district. Will the Hon. Minister be pleased to state the number of officers trained in that Centre ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அது பற்றிய முழு விவரம் இல்லை.

திரு. ந. தருமலிங்கம்: வேதாரண்யம், கோடிக்கரைகாடு பிரசித்தி பெற்ற காடுகள் ஆகும். இங்கு மான்கள், குதிரைகள், முரட்டுத்தனமான காளை மாடுகள் இடம் பெற்றுள்ளன. தொண்டியக் காடு, தில்லைவனம் போன்ற பகுதிகளில் காட்டு வளத் துறை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அது பற்றி யோசிக்கலாம்

திரு. கே. போஜன் : காட்டு வளத்துறை பயிற்சி நிலையங்களில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை மாணவர்கள் பயிற்சி பெற சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி ; ஆண்டு ஒன்றுக்கு .·.பாரஸ்டர் பயிற்சிக்கு 30 பேரும், பாரஸ்ட் காடுகள் பயிற்சிக்கு 120 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தப் பயிற்சியில் சேர என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்? எப்படிச் சேர வேண்டும் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பயிற்சி பெறக்கூடிய பாடங்கள் காடு வளர்ப்பு, வன விலங்குகள் பாதுகாப்பு, காடுகள் குறித்த சட்டம் போன்றவற்றிலே பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

திரு. டி. மார்டின் : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து ஏற்கனவே அந்தப் பாடங்களைப் படித்துத் தெரிந்தவர்கள் அந்தப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா அல்லது அவர்கள் அங்கு சேர்ந்த பிறகு அந்தப் பாடங்கள் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சேர்ந்த பிறகுதான் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

ஹாஜி ம. மு. பீர் முகமது : நமது மாநிலத்தில் காட்டு வளத் துறை பயிற்சி நிலையம் புதிதாக ஆரம்பிப்பதானால் அடர்ந்த காடுகள் அடங்கிய திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பொதிகை மலைச்சாரலிலே பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற பகுதி பற்றியும் யோசிக்கப்படும்.

விளம்பரத் துறை.

*147. வின.—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.

சிக்கனத்தை உத்தேசித்து விளம்பர இலாகாவை (Publicity மூடிவிடுவது அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : மாவட்டவிளம்பர அதிகாரிகள் இருப்பதால் எந்த விதமான பயனும் இல்லே. அவர்களே எடுத்து விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாவட்ட ரீதியாகச் செய்து வந்த விளம்பரங்கள் மூலமாகத் தகுந்த பலன் கிடைக்க வில்லே. ஆகவே, அவை மாத்திரம் நீக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. விஞயகம் : இந்த மாவட்ட விளம்பர அதிகாரிகள் ஏற்கனவே ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சிக்கு விளம்பரம் தேடிஞர் களோ என்பதை மனதில் வைத்துக்கொண்டு இந்த ஆட்சி அவர்களே வேலே நீக்கம் செய்தது என்பது உண்மைதாஞ ?

மாண்புமிகு பேரவைத் தலேவர் கேள்வி நேரத்தில் **imputation:**— குற்றங்குறை சாட்டுதல் கூடாது.

திரு. கே. விஞயகம் : Sir, I will amend it. இந்த ஆட்சியிலே அவர்களே வைத்திருந்தால் இந்த ஆட்சிக்கு விளம்பரம் தேட அவர் களேப் பயன்படுத்த முடியுமே. அதை விட்டு ஏன் அவர்களேக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மாற்ற வேண்டும் ? இதுவரை எத்தனே அதிகாரி கள் வேலேயிலிருந்து நீக்கப்பட்டிருக்கிருர்கள் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அவர்கள் காங்கிரஸ் கட்சிக்காகப் பணியாற்றிஞர்கள் என்ற காரணத்திற்காக மாத்தி ரம் அவர்களே நீக்கவில்லே. அதிலே வேலேநீக்கம் செய்யப்பட்டவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்களுக்கு வேறு வேலே தரப்பட்டிருக்கிறது. முழுப்பட்டியல் வேண்டுமென்ருல் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

DR. H. V. HANDE : Sir, as the hon. Member, Thiru Vinayakam has put it there was some rumour that they were working for the Congress Party at the time but whether it is true or not is not the question now and also there should be no imputation during Question Hour. But I want to know whether this Government consider that it is necessary to continue them in view of the fact that they were employed for propagating purely Party ideals. Also, will the present Government reconsider whether this Department sholuld continue to be run as it is and whether this Government are utilising them for publicising and propagating their party ideals and programmes? Will the Government come forward to give a categorical answer so that a number of rumours spreading outside can be completely quelled ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்த விளம்பர இலாகா நீக்கப்படவில்லே. அந்த இலாகாவில் ஒரு துணே அங்கமாகப் பணியாற்றிக் கொண்டு வந்த கிளேதான் நீக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் காரணம் அந்தக் கிளேயின் மூலமாக ஆற்றி வந்த விளம்பரப் பணிகள் நினைத்ததைப் போல் சரியான பயன் அளிக்காததுதான். அந்த விளம் பரங்களே வேறு வகையில் செய்வது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது பலருக்கு வேலே கொடுக்கப்பட்டிருக்கிறது, ஒரு சிலரைத் தவிர என்று குறிப்பிட்டார்கள். அந்த ஒரு சிலரை மீண்டும் எடுத்துக்கொள்ள முயற்சி செய்வார்களா? அவர்களே நீக்குவதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதிலே ஒருவர் சர்க்காரை எதிர்த்து வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிருர்

1968 மார்ச் 5]

ஏனைய அனைவருக்கும் மறுபடியும் பதவி கொடுத்திருப்பதாகத்தான் என் நினைவில் இருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால் முழுத் தகவலும் தர முடியும். மு. ப. 10 00

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : திருவிதாங்கூர்—கொச்சியில் இருந்து நிரந்தரமாக்கப்பட்ட ஒரு உத்தியோகஸ்தர் இங்கு மாற்றப்பட்டார். அவர்களை இன்று வேலையிலிருந்து நீக்கம் செய்திருக்கிறார்கள். அவருக்கு வேறு வேலை கொடுக்க இந்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அவருக்கும் வேலை தந்திருப்பதாகத்தான் நினைவு இருக்கிறது. மீண்டும் அதுபற்றி ஒரு கேள்வி கேட்டால் அதற்குரிய பதிலைத் தருகிறேன்.

திரு. எஸ். ராமச்சந்திரன்: விளம்பர இலாகாவில் சிக்கன நடவடிக்கைகள் காரணமாக நீக்கப்பட்டவர்களில் தாற்காலிகமானவர்கள் இருக்கிறார்களா? தாற்காலிகமானவர்களை நீக்குவதற்கு சர்க்காருக்கு முழு அதிகாரம் இருப்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து. தாற்காலிகமானவர்களும் உண்டு. அவர்களை நீக்க சர்க்காருக்கு முழு உரிமையும் உண்டு.

திரு. ரா. கிருட்டிணன் : மாவட்ட விளம்பரத்துறை அலுவலகங்கள் நீக்கப்பட்ட பின் அந்த அலுவலகங்களில் ஒரு உந்துவண்டி, (வான்) பயன்படுத்தப்பட்டு வந்ததே, அந்த உந்து வண்டிகளை நோயாளிகளை எடுத்துச் செல்லும் வண்டிகளாக மாற்றி அந்தந்த மாவட்ட மருத்துவ மனைகளுக்கு வழங்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்த வண்டிகள் எல்லாம் மாவட்ட கலெக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தகுந்த வகையில் இன்று அதற்குரிய முறையில் வேலை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. முனியாண்டி: சர்க்கார் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு காங்கிரஸ் கட்சிக்கு பிரசாரம் செய்து கொண்டிருந்தவர்கள் மீது சென்ற அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட தகவல் எதுவும் இப்போது சர்க்கார் வசம் இருக்கவில்லை.

திரு. வ. ஜார்ஜ் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது குறிப்பிட்டார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சிக்கு பிரசாரம் செய்ததன் காரணமாகவும், வேறு பல காரணங்களுக்காகவும் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்கள் என்று. அவர்கள் உண்மையில் அரசாங்கப் பிரசாரம் தான், அரசாங்க விளம்பரங்கள்தான் செய்து வந்தார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? இப்போது இந்தப் புதிய அரசாங்கம் அரசாங்க விளம்பரங்கள் செய்யவில்லையா? அவர்களைப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு) இப்போது வேறு வேலை கொடுத்திருப்பதால் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் கிடைத்துள்ள நன்மை என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அவர்கள் கட்சிப் பணியாற்றினார்கள் என்பதற்காக என்று நான் சொல்லவில்லை. மாறாக எதிர்க்கட்சியில் இருப்பவர்கள்தான் அப்படிச் சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்வதன் மூலம் அவர்கள் கட்சிப் பணியாற்றினார்கள் என்று கூட இப்போது கருத இடமிருக்கிறது. வேலை நீக்கம் செய்யப்பட்ட அனைவருக்கும் வேறு வேலை தரப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆற்றி வந்த விளம்பரப் பணி சரியானமுறையில், நல்ல முறையில் விளம்பரங்கள் செய்யப்படவில்லை. அதனால் சர்க்காருக்கு எந்தவிதமான பயனும் ஏற்

படவில்லை என்று புதிய அரசு கருதிய காரணத்தினால்தான் அந்தப் பதவிகளை மட்டும் நீக்கி அவர்களுக்கு வேறு பதவிகள் தந்து இருக்கிறது. விளம்பரம் செய்கிற முறைகளையெல்லாம் அதில் புதிய மாறுதலை கையாள வேண்டுமென்று அரசு உத்தேசித்து வருகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : முன்பிருந்த அரசாங்கம் இந்த மாவட்ட விளம்பர அதிகாரிகளை பப்ளிக் சர்வீஸ் கமிஷனைக் கலக்காமல் தங்கள் இஷ்டம்போல், அமைச்சர்கள் விருப்பம்போல் நியமித்தார்கள் என்பது உண்மையா? அந்தப் போக்கை மாற்றவேண்டுமென்று இந்த அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தனிக் கேள்வி போட்டால் முழு விவரங்களும் அளிக்க முடியும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பழைய அரசு சர்வீஸ் கமிஷன் மூலம் அந்த அமைப்பை ஏற்படுத்தி அதற்கான அலுவலர்களை நியமித்தார்களா என்று திரு. அரங்கண்ணல் அவர்கள் கேட்டார்கள். சர்வீஸ் கமிஷன் மூலம் அது அமைக்கப்பட்டதல்ல, அப்போதிருந்த அரசாங்கம் தானாகவே அந்த அமைப்பை ஏற்படுத்தி சிலருக்கு வேலை கொடுக்கப் பட்டது. அது புதிதாக ஏற்பட்ட திடீர் அமைப்புதான்.

திரு. கே. விநாயகம் அப்படிபணியாற்றி வந்த டிஸ்ட்ரிக்ட் பப்ளிஸிட்டி ஆபீசர்களில் ஒருவர் மட்டும் வழக்குமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள் என்று கூறினார்கள். மற்றவர்களில், நீக்கப்பட்டவர்களில் எவ்வளவு பேர்களை திரும்ப அந்தத் துறையில் அமர்த்தியிருக்கிறார்கள். அவர்களின் தொகை என்ன? அவர்களை இதுவரை அமர்த்தவில்லை என்றால் அப்படி அமர்த்துவதற்கு ஏதாவது விதி முறைகள் அரசாங்கத்தினிடம் இருகிறதா? இப்போது அப்படி ஏற்றுக்கொண்டவர்கள் சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் தகுதி பெற்றவர்கள் என்ற ஏதாவது ஆதாரத்துடன் இப்போது இருப்பவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அவர்கள் எல்லாம் ஏற்கனவே ஒருசில ஆண்டுகள் பணியாற்றி வந்திருக்கிறார்கள். எனவே அவர்களை மீண்டும் சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்ப உத்தேசம் இல்லாமலிருக்கலாம். வேலையில் இருந்து நீக்கப்பட்ட அனைவருக்கும் ஒருவரைத் தவிர வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. யார் யாருக்கு எந்தெந்த வேலைகள் என்ற பட்டியல் இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்குரிய பதில் தரப்படும்.

திரு. எஸ். ஆறுமுகம் : இந்த மாவட்ட விளம்பர இலாகா—முன்னால் அந்தந்த தாசில்தார்களிடம் இந்தப் பொறுப்புகள் இருந்து முன்னால் இருந்த அரசு இப்படிப்பட்டதொரு மாற்றத்தை ஏற்படுத்தியதால் சர்க்காருக்கு நிறையச் செலவு ஏற்படுகிறது என்பதை உணர்ந்து இந்த இலாகா தேவையில்லை என்று கருதித்தான் சிக்கனத்தை முன்னிட்டு பழைய முறைப்படி மாவட்ட அளவில் கோட்டாட்சித் தலைவர்களிடத்தில் இந்தப் பொறுப்புகளை ஒப்படைப்பதன் மூலம் நல்லமுறையில் குடும்பக் கட்டுப் பாடு விளம்பரம், சர்க்கார் விளம்பரங்கள் இவைகளை தனியானதொரு இலாகா இல்லாத நிலையில் இயங்கி வருவதன் மூலம் சர்க்காருக்கு சிக்கனம் ஏற்படுகிறது என்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நான் ஆரம்பத்தில் சொன்னேன். சிக்கனத்தை முன்னிட்டு அல்ல இந்தப் பதவி நீக்கம் என்று. அவர்களின் பணி சரியான முறையில் பலன் தரவில்லை என்பதால் கிளை எடுக்கப்பட்டது என்று கூறினேன். அனைவருக்கும் வேலை தரப்பட்டிருக்கிறது. இன்று சர்க்கார் தரப்பிலிருந்து என்னென்ன விளம்பரங்கள் எந்தெந்த வகையில் செய்யப்படவேண்டுமோ அவைகளை புதுத்துறை மூலம் விளம்பரங்கள், வெளியீடுகள், அச்சீடுகள் இவைகள் எல்லாம் உரிய வகையில் செய்ய அரசு ஆலோசித்து வருகிறது. மாவட்ட

ரீதியில் மாவட்டங்களில் செய்துகொண்டிருந்த விளம்பரங்கள் இன்று செய்யப்படவில்லையே தவிர வேறு எல்லாவிதமான விளம்பரங்களும் புதுத் துறை மூலம் செய்யப்பட்டுத்தான் வருகிறது.

THIRU M. WILLIAM: What was the work allotted to the Publicity Officers and the staff working under them? Were they not broadcasting the activities of the Department and educating the public on the various social welfare schemes executed by the Government?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தக் கிளை செய்து வந்த பணிகள், சர்க்கார் அச்சகத்தின்மூலம் சர்க்கார் வெளியிடுகிற வெளியீடுகளையெல்லாம் கிராம மக்களிடம் தர வேண்டும், திரைப் படங்களை கிராம மக்களிடையே போட்டுக் காட்டி சர்க்கார் செய்துள்ள சாதனைகளை அவர்களிடம் சுட்டிக் காட்டி விளக்கங்கள் தர வேண்டும். வேறு சாதனைகள் பற்றி சர்க்கார் அச்சகத்தின் மூலம் வெளியிடப்படுகிற வெளியீடுகள் போன்றவைகளை பள்ளிகள், கல்லூரிகள், இன்னும் பொது ஸ்தாபனங்கள் போன்றயிடங்களில் வெளியிட்டு தகுந்த விளம்பரம் தரவேண்டும் என்பது அவர்கள் பணி. அதன்மூலம் சரியான பலன் கிடைக்கவில்லை என்பதற்காக அந்தப் பதவிகள் நீக்கப்பட்டிருக்கின்றன. முறையான வெளியீடுகள் வேறு பல துறைகளில் இன்று விளம்பரம் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சௌந்திரபாண்டியன். மாவட்ட அளவில் உள்ள விளம்பர இலாகா எப்போது ஆரம்பிக்கப்பட்டது? அதனால் அரசாங்கத்திற்கு ஏதாவது பயன் ஏற்பட்டதற்குரிய அறிகுறி தென்படுகிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கடந்த அரசாங்கம் தேர்தலில் தோற்றுப் போனவர்களையும், அமைச்சர்கள், மற்றவர்களின் சொந்தக்காரர்களை பெரியயிடங்களில் வேலைக்கு வைக்க -- பொலிட்டிக்கல் ஃபேவரிட்டிஸம் செய்வதற்காக ஏற்பட்ட அமைப்பு அது. சாதாரண குமாஸ்தா வேலைக்குக் கூட சர்விஸ் கமிஷனிலிருந்து வரவேண்டுமென்ற நியதியிருக்க அதற்கு முற்றிலும் மாறானமுறையில் கெஸட்டட் ஆபிசர்கள் போன்ற நியமனங்கள் செய்யப்பட்டன. அதை நிரூபித்துக்கூட காட்ட முடியும். பலரை, கடலூர் பக்கத்தில் பாராளுமன்றத் தேர்தலில் நின்று தோற்றுப்போன ஒருவருக்கு, பெரம்பலூரில் திரு கக்கன் அவர்கள் சம்பந்தமான ஒருவர், இன்னும் பெரிய தலைவர்களின் சொந்தக்காரர்கள் இவர்கள் எல்லாம் அப்பட்டியலில் வருகிறார்கள். அரசாங்கத்தில் நல்ல முறையில் வேலை செய்து வந்தவர்களுக்கு கெஸட்டட் வேலை கிடைக்காமல் திடீரென்று வெளியில் இருந்து கெஸட்டட் உத்தியோகஸ்தர்களைக் கொண்டு வந்து போட்டார்கள். இதுதான் அதுபற்றிய உண்மை நிலை.

திரு. எம். எஸ். மணி : தலைவரவர்களே, இந்த இலாக்கா மாவட்ட அளவில் ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கமே காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற ஊழியர்களுக்கு வேலை கொடுப்பதற்காக என்று குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையிலே திருச்சி மாவட்டத்திலே இரண்டு அதிகாரிகளுக்கு வேலை கொடுத்ததாக அரசினருக்குப் புகார் வந்ததா? அப்படி வந்திருந்தால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட புகார்கள் வந்திருப்பதாக என்னிடத்தில் தகவல் இல்லை. நான் மீண்டும் மறுபரிசீலனை செய்து பார்க்கிறேன்.

மணல்மேடு கூட்டுறவு நூற்பாலை.

148 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்கா, மணல்மேட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலை நிர்வாகிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே இருந்து வந்த தகராறு தீர்க்கப்பட்டு விட்டதா?